23rd March 1959]

SRI I. G. MANICKAM : கிராமாந்திர ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் போவதற்கு மறுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகையால், கிராமாந்திர ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் போக சர்க்கார் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்? கட்டாய சேவைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர யோசனை செய்து கொண்டிருக்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு நிவாரணம் இப்போது அதிகப்படி டாக்டர்கள் படித்து டாக்டர்கள் வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் அதிகமாய் விட்டால் டாக்டர்கள் அதிகமாகி விடுவார்கள்.

SRI A. A. RASHEED : Is it a fact, Sir, that a few doctors have resigned because their seniority was overlooked in promotions? 10-10 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : I do not think so, Sir.

Agricultural indebtedness

* 939 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the question No. 729 answered on 30th October 1958 the main causes for agricultural indebtedness?

THE HON. SRI M. A. MANICKAVELU : No systematic survey has been made to analyse the causes for agricultural indebtedness. Some of the general factors which contribute to their indebtedness are : pressure of population on land, uncertainty of season, present methods of cultivation and marketing, hereditary debts, extravagant expenditure on occasions like births, deaths, marriages and festivals, litigation, pests and diseases, etc.

SRI N. K. PALANISAMI : விவசாயிகள் பட்டிருக்கும் கடன் பளுவைக் குறைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கடன் பளுவை குறைக்கும் வகையிலே முன்புசெய்யப்பட்ட நிவாரணங்கள் கனம் அங்கத்தினருக்குத் தெரிந்திருக்கலாம்.

SRI T. T. DANIEL : In view of the fact that one of the main factors that the agriculturists suffer much from is, failure of crops due to the failure of seasons, will the Government examine the possibility of introducing as early as possible a Crop Insurance Scheme?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is not under contemplation just at present.

SRI A. GOVINDASAMY : சில சமயங்களில் போதுமான மழை பெய்யாத காரணத்தால் விவசாயம் பாதிக்கப்படுகிற போது வரி வஜா செய்யப்படுகிறது. அதோடு அவர்கள் வாங்கியிருக்கும் கடன்களையும் தவணைகள் தள்ளி வாங்கிக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா? விருத்தாசலம் பகுதியில் வரி வஜா மட்டும் செய்து கொடுத்திருக்கிறார்கள். கடன்களின் தவணைகளையும் ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சரியான பருவ மழை இல்லாததால் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக வரி வஜாவும் செய்யப்படுகிறது. வரியும் ஒத்தி வைக்கப்படுகிறது. அதோடு கடன் வசூலும் ஒத்தி வைக்கப்பட்டுத் தான் வருகிறது.

[23rd March 1959

SRI K. VINAYAKAM : Sir, in view of the large-scale rural indebtedness prevalent in our State, will Government consider the possibility of declaring a general moratorium for a period of five years towards their general amnesty?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படிச் செய்வதனால் ஒரு பெரிய கெடுதி கூட ஏற்படுகிறது. அதாவது, அம்மாதிரி அடிக்கடி கிரெடிட் விஷயத்திலே நாம் பிரவேசித்தால் ஜனங்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு, அத்தியாவசியமான விஷயங்களுக்குப் பணம் கிடைப்பது இல்லை. ரொம்ப நெருக்கடியான நிலைமை ஏற்படும்போது இம்மாதிரி செய்வது வழக்கம். அம்மாதிரி இப்பொழுது ஒன்றும் இல்லை.

SRI N. K. PALANISAMI : விவசாயிகள் கடன் படுவதற்கு முக்கிய மான காரணம் விலைவாசி ஏற்றத் தாழ்வு (ப்ளக்டுவேஷன் இன் ப்ரைஸெஸ்). ஆகவே, விலை வாசியை நிர்ணயமாகச் செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எனது சக மந்திரி அவர்கள் இங்கே அதுபற்றிய பிரச்னைகளையெல்லாம் அலசிப் பேசியிருக்கிறார். அதிலிருந்து கனம் அங்கத்தினர் அவர்களும் தெரிந்துகொண்டிருப்பார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையில் பின்னணியிலிருந்து கடனாளியாக இருப்பதால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பொருளாதாரத் துறையிலே உயர்த்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது ஒருபுறம் இருந்தாலும், விவசாயிகளும் தங்களுக்கு ஏற்படும் அனாவசியமான செலவுகளைக் குறைத்துக்கொண்டு நல்ல முறையிலே வாழ்க்கை நடத்தினால், ஓரளவுக்கு அவர்களுக்குப் பரிகாரம் கிடைக்கும்.

SRI T. SAMPATH : Sir, may I know whether Government have got the intention to repeal Act IV of 1939, namely, the Agricultural Debt Relief Act for the reason that it has served its purpose ?

THE HON. SRI M. A. MANICKAVELU : As the Hon. Member has stated, it has served its purpose and therefore there is no urgency of repealing it. It has exhausted itself more or less.

SRI R. SWAMINATHA MERKONDAR : பருவ நிலைக் குறைவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே நூறு ரூபாய்க்கு அதிகமாக கிஸ்தி செலுத்தக் கூடிய விவசாயிகள் பெருமளவுக்குக் கடன் பளுவினால் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவர்களைப் பொறுத்தும் வரி வஜா செய்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நூறு ரூபாய்க்கு மேற்பட்ட கிஸ்தி செலுத்துகிற பட்டாதார்களுக்கு இந்த வசதி யில்லை என்பது இடைக் காலத்தில் ஏற்பட்டது. எந்தக் காரணத்தினால் ஏற்பட்டதென்றால்—அவர்கள் சற்று நல்ல நிலைமையிலே இருக்கக்கூடியவர்கள், அவர்களுக்கும் வரி வஜா வசதி செய்து கொடுத்தால், சின்னபட்டாதார்களுக்கு அவ்வளவு அதிகமாக கொடுக்க முடியாது என்ற வகையிலே இது அப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.